1981 ஏப்ரல் 10]

சாத்தியம் இல்லை என்று குறிப்பிட்டார்கள். தமிழ்நாட்டிலே படித்த பெண் வக்கீல்கள் ஏராளமான பேர்கள் இருக்கிறார்கள். பெண் நீதிபதிகள் மிகக் குறைவாக இருக்கிறார்கள். ஆகவே குறைந்தபட்சம் நமது உயர்நீதிமன்றத்திலும், ஒவ்வொரு மாவட்ட செஷன்ஸ் கோர்ட்டுகளிலும் ஒவ்வொரு பெண் நீதிபதியை நியமிக்க அரசு ஆவன செய்யுமா என்பதை கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி.பொன்னையன்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இதுகுறித்துத்தான் நான் ஏற்கனவே சொன்னேன். குறிப்பிட்ட வழக்குகளை பெண் நீதிபதிகள் விசாரிக்க இடம் இல்லை என்று நான் சொல்லவில்லை. பெண் நீதிபதிகள் எங்கேனும் இருப்பார்களேயானால், சில குறிப்பிட்ட வழக்குகளை டிரான்ஸ்பர்செய்து அந்தப் பெண்நீதிபதிகள் விசாரிக்கலாம் என்று கூட உத்தரவிடலாம். ஆனால் நீதிபதிகளாகப் பெண்களை நியமிப்பதைப்பொறுத்தவரையிலும் அரசியல் சட்டத்திலே அதற்கு இடம் இல்லை. பெண்ணைத்தான் நீதிபதியாகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும்,அதற்காக ரிசர்வ் செய்யமுடியாது என்பதுதான் அரசியல் சட்டத்திலே இருக்கின்ற பிரச்னை. தகுதி உள்ள பெண் அந்தத் தேர்வுக்கு வருகின்றபோது, பெண்களுக்கு அந்தத் தகுதி இருக்குமானால், அந்தப் பெண்களைத் தேர்ந்தெடுக்க சட்டத்திலே இடம் இருக்கிறது. அந்த அடிப்படையில் ஏற்கனவே அது நடைமுறையில் இருந்து வருகிறது.

திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கற்பழிப்பு வழக்குகளை விசாரிக்கும்போது, பாதிக்கப்பட்ட பெண்கள், பப்ளிக் கோர்ட்டிலே, ஓப்பன் கோர்ட்டிலே சாட்சி சொல்லக் கூச்சப்படுகிறார்கள். அப்படிப் பட்ட வழக்குகளை தனி அறையில், அதாவது இன்கேமராவில் விசாரிப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு அரசு ஒன்றும் ஏற்பாடு செய்ய வேண்டிய தேவையில்லை. காரணம் கிரிமினல் புரொசிஜர் கோடிலேயே இதுபோன்ற வழக்குகளை விசாரிப்பதற்கு இன்கேமராவில் நடத்த வேண்டும் என்று பாதிக்கப்பட்டவர்கள் விரும்புவார்களானால், அப்படி நடத்த நீதிமன்றத்திற்கே அந்த அதிகாரம் இருக்கின்றது. மனு கொடுத்தால் நீதிமன்றம் அதை மறுக்கக் கூட முடியாது. கண்டிப்பாக அப்படி நடத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முன்னாள் ஜில்லா போர்டு கட்டிடம், சேலம்

*வினா எண் 733 திரு செ. செம்மலை: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சேலம் முன்னாள் ஜில்லா போர்டு கட்டிடத்தில் நடத்தப்பட்டுவரும் சேலம் பொன்னி கூட்டுறவு சிறப்பு அங்காடி வாடகை ஏதேனும் செலுத்தி வருகிறதா?

(ஆ) எந்தவகையான ஒப்பந்தத்தின் பேரில் ஒப்படைக்கப் பட்டு நடத்தப்பட்டு வருகிறது?

(இ) அக்கட்டிடத்தை சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் வசம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) முன்னாள் ஜில்லா போர்டு கட்டிடத்தில் இயங்கிவரும் சேலம் பொன்னி சிறப்பங் காடி மாதம் ரூ. 2,285 வாடகை செலுத்தி வருகிறது.

(ஆ) அவ்வப்போது புதுப்பிக்கப்படும் குத்தகை ஒப்பந்தத்தின் பேரில்.

(இ) ஆம்.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அலுவலகத்தில் இடநெருக்கடி அதிகம் இருக்கின்ற காரணத் தாலும், பல்வேறு பிரிவுகள் வாடகைக் கட்டடங்களில் நடந்து கொண்டு வருகிற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தாலும், அந்தப் பழைய கட்டடத்தை அவர்களுக்கே திரும்பக் கொடுத்துவிட்டு, அந்தக் காம்பவுண்டிலே உள்ள காலி இடத்தை, கூட்டுறவுத்துறை விலைக்கு வாங்கி அங்கே பல மாடிக் கட்டிடம் கட்டி, இந்தக் கூட்டுறவுச் சிறப்பங்காடியை அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தனது அலுவலகத்திற்கு இட நெருக்கடி இருக்கிற காரணத்தால் அந்தக் கட்டிடம் அவர்களுக்கு வேண்டும் என்று கேட்டு, அந்த அடிப் படையில் கொடுக்கவும் இசைவு தரப்பட்டுள்ளது. 10 இலட்சம் ரூபாய் செலவில் அந்தக் காலி இடத்தில் சிறப்பங்காடி கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கட்டிடம் கட்டும் தொழிலாளர்களுக்கான குறைந்த பட்ச கூலி நிர்ணயம்

*வினா எண் 734. திரு து. புருஷோத்தமன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கட்டிடம் கட்டும் தொழிலாளர்களுக்கான குறைந்த பட்ச கூலி நிர்ணயம் செய்ய அரசு எண்ணியுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: கட்டிடம் கட்டும் தொழில்களுக்கு முதன்முதலாக 1952ஆம் ஆண்டில் குறைந்தபட்ச ஊதிய விகிதங்கள் நிர்ணயிக்கப்பட்டன. அவ்விகிதங்கள் பின்னர் அவ்வப்போது திருத்தப்பட்டு தற்போது 30-10-76ஆம் நாளிட்ட அரசாணை 984-ன்படி திருத்திய விகிதங்கள் அமுலில் உள்ளன.